புதுக்கோட்டை கவிநாடு கண்மாயில், மாவட்ட நிர்வாகம் மற்றும் கடைமடை பகுதி ஒருங்கிணைந்த விவசாயிகள் சங்கம் (கை.ஃபா) இணைந்து, தூர்வாரும் பணி மற்றும் சீமைக்கருவேலம் மரங்கள் அகற்றும் பணியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று முன்தினம் (12.06.2024) தொடங்கி வைத்தார்கள். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.ஆர்.ரம்யாதேவி அவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.பா.ஐஸ்வர்யா, நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு 30வது வார்டில் வட்டக் கழக செயலாளர் தென்கரை முத்து ஏற்பாட்டில் நெல்லை மாநகராட்சி தொடக்கப்பள்ளியிலும்,எஸ்.டி.சி கிளை தொடக்கப்பள்ளியிலும் மாணவர்,மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி பயில உபகரணங்கள் ஆகியவற்றை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் வழங்கினார்.நிகழ்வில் மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் நவநீதன், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா, மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரத்தின பாலா, மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் தேவிகா, வட்டக் கழக செயலாளர் செல்வம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஜூன் 15 இல் கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா!

தஞ்சை தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

மாவட்டச் செயலாளர் - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தஞ்சாவூர், ஜூன் 14-

ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட திமுக செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : -

வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், அக்கூட்டத்தில் தஞ்சை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், ஒன்றிய, பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக் குழு நிலைக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள்,

மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில் நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி , அமைப்புச்சார ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கோவையில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா!

மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

மயிலாடுதுறை, ஜூன்14-

ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டுமென மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித்தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,

நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியை வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என "முப்பெரும் விழா நடைபெறுகிறது. மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ளும் விதமாக, மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னால் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்,கிளை வார்டுக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், ஒன்றிய, பேருராட்சி மன்ற தலைவர்கள். நகர்மன்ற தலைவர்கள், ஊராட்சிமன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு. ஒன்றியக் குழு உறுப்பினர்கள்மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள்,

மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் கூறியுள்ளார்.